DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.58/2023

**prosecution witness: LW-8 as PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : முனியாண்டி | தொழில் | : | சார்பு ஆய்வாளர் இராமநாதபுரம் பி1 நகர் காவல் நிலையம் |
| த/பெ. | : ராமு | வயது | : | 58 |
| கிராமம் | : இராமநாதபுரம் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>24.09.2025</u>

(எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது இராமநாதபுரம் பி1 நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.06.2022 ம் தேதி 9.30 மணியளவில் பாம்பன் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ஆக பொறுப்பு நிலைய அலுவலில் இருந்தபோது இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று 10.00 மணியளவில் அங்கு சென்று முனீஸ்வரன் மனைவி வேலம்மாள் புகார் மனுவை பெற்று நிலையம் திரும்பி 11.00 மணியளவில் பாம்பன் காவல் நிலைய குற்ற எண் 108/2022 சட்டப்பிரிவுகள் 294(பி), 448, 323, 506(1) இதச மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை புகாருடன் இணைத்து கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ).**

பின்பு வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே பகல் 12.00 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் மந்திரி குமார் மற்றும் அசோக் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அன்றைய தினமே சாட்சிகள் வேலம்மாள், முனீஸ்வரன், முனீஸ்வரி, ராசாத்தி, மந்திரி குமார் மற்றும் அசோக் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.5, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6, ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

இவ்வழக்கின் எதிரி மாண்புமிகு இராமநாதபுரம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட வேலம்மாள் என்பவருக்கு சிகிச்சை அளித்த இராமேஸ்வரம் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.தஸ்லிமா என்பவர் கொடுத்த விபத்து பதிவேடு, சாதாரண காயம் என்று காயச்சான்று பெற்று அரசு மருத்துவரின்

வாக்குமூலத்தை பதிவு செய்தேன். **காயச்சான்றிதழுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் இவ்வழக்கில் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது 294(பி), 448, 323, 506(1) இதச மற்றும் பிரிவு 4 of TNPHW Act வின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை</u>

ஆட்டை நாய் கடித்துவிட்டதால் இந்த பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லப்பட்டது என்றால் சரிதான். புகார்தாரரின் கணவர் பெயர் முனீஸ்வரன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த எவ்வளவு நேரம் கழித்து என்னிடம் புகார் கொடுக்கப்பட்டது என்றால் ஒருநாள் கழித்து புகார் கொடுக்கப்பட்டது. புகாரில் சம்பவம் எத்தனை மணிக்கு நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மாலை 6.30 மணியளவில் எதிரி அடித்ததாக புகாரில் சொல்லப்பட்டது. புகார்தாரர் என்னிடம் நேரடியாக புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். 14.06.2022ம் தேதி புகார் கொடுத்ததாக சொன்னால் அது தவறு.

முதல் தகவல் அறிக்கையின் நகலினை புகார்தாருக்கு கொடுத்தீர்களா என்றால் காளம் 15ல் எப்.ஐ.ஆர். கொடுத்தாக கையெழுத்து வாங்கியுள்ளேன். புகார்தாரர் எத்தனை நாட்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாம்பன் பரவைத்தோப்பு என்ற பகுதியே இல்லை என்றால் சரிதான். எனக்கு மருத்துவமனையில் இருந்து நேரடியாக தகவல் சொன்னார்களா என்றால் இல்லை. மருத்துவமனையில் பணியில் இருந்த போலீசார்தான் என்னிடம் தகவல் சொன்னார். தகவல் தெரிவித்த நேரம் என்னவென்றால் 15ம் தேதி காலை 9.00 மணிக்கு தகவல் சொன்னார்கள். 15.06.2022ம் தேதியன்று காலை 9.00 மணிக்கு முன்பாக இந்த வழக்கு பற்றிய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் கம்போ, வேறு ஏதேனும் ஆயுதங்களோ கைப்பற்றவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் காயச்சான்று ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தனியாக காயச்சான்று பெறவில்லை விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து பதிவேடு என்பதும் காயச்சான்று என்பதும் வெவ்வேறானது என்றால் சரிதான்.

விபத்து பதிவேட்டில் வேலம்மாளின் கணவர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சண்முகம்தான் அவர் பெயர். புகார்தாருக்கு சண்முகம் என்பவர் என்ன உறவிமுறை என்று நான் விசாரித்து தெரிந்து கொள்ள முயலவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து பதிவேட்டில் புகார்தாரர் எந்த தேதியில் டிஸ்சார்ஜ் ஆனார் என்ற விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் எத்தனை நபர்கள் தாக்கினார்கள் என்ற விபரம் இல்லை என்றால்

சரிதான். விபத்து பதிவேட்டில் மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்தது யார் என்று குறிப்பிடப்படவில்லை ஆனால் டாக்டர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து பதிவேட்டில் பரவைத்தோப்பு பாம்பன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவர் தவறாக குறிப்பிட்டுள்ளார். புகாரில் புகார்தாரரின் கையொப்பமும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.1 ன் கையொப்பமும் மாறுபாடாக உள்ளது என்றால் சரிதான். சாட்சி வேலம்மாளை புகார் கொடுக்கும்போது விசாரித்ததை தவிர்த்து வேறு தேதிகளிலோ வேறு வகையிலோ நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

சாட்சிகள் முனீஸ்வரன், முனீஸ்வரி ஆகியோர்களை எந்த தேதியில் எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தீர்கள் என்றால் 15.06.2022 ம் தேதி அன்று 13.00 மணிக்கு வீட்டில் வைத்து விசாரணை செய்தேன். மாதிரி வரைபடத்தில் உள்ள சம்பவ இடத்தின் அருகில் உள்ள நபர்களை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எந்த சாட்சிகளையும் முறையாக விசாரணை செய்யாமலும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும்பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இந்த எதிரி மீது வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 வேலம்மாள் என்னிடம் நேரடியாகவும் வாக்குமூலமாகவும் புகார் மனு ஏதும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.09.24 09:12:15 +0530